VAALIPAN MINISTRIES
SRI LANKA

# வாலிபன்
# VAALIPAN

வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

இதழ் - 77 | வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை | சித்திரை - 2014




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபன்
VAALIPAN
வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

**கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபன் வாசகர்களுக்கு,**

உயிர்த்தெழுந்த கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தவக்காலங்களைக் கடந்து வந்திருக்கின்றோம். சரீரங்களை ஒருங்குபடுத்தி ஆத்துமா பெலப்பட உபவாசத்திலும், விசுவாசத்திலும் தரித்திருந்து கர்த்தரின் வார்த்தைகள் எம்மில் வளரவும், பெருகவும் இடமளிப்போமாக!

கடந்த நாட்களில் வாலிபர்கள் வாலிப பாசறைகளிலும் சிறுவர் விடுமுறை வேதாகமப் பாடசாலைகளிலும் தமது விடுமுறை காலங்களைக் கழித்துள்ளனர். இதுவொரு நல்ல செய்தி. எனினும் தமது விடுமுறை காலங்களைக் கிறிஸ்துவுக்காக ஒதுக்காத; கிறிஸ்துவை முன்னுரிமைப் படுத்தாத பலரையும் காணக்கூடும். பிள்ளைகளையும் காணலாம். என்ன நினைக்கின்றீர்கள்?.

ஆதியாகமம் 4:7 இல் நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும் என எழுதியுள்ளது. சற்றே சிந்தித்துப் பார்ப்போம். இன்றைய உலகில் பாவம் வாசற்படியில் மாத்திரம் அல்ல அதனையும் நெருங்கி வந்துகொண்டிருக்கின்றது. பிள்ளைகள், வாலிபர்கள் தவறான வழியில் செல்வதற்கு எத்தனையோ இலகுவான பாதைகள் பெற்றோரால் கட்டுப்படுத்த முடியாத வகையில் பிள்ளைகளின் போக்குகள் . . . பல பெற்றோர் தமது பிள்ளைகள் திருந்தி வாழவேண்டும் என ஜெபிக்கும் படி கேட்கின்றனர். ஆனால் இவர்களை சரியான பாதையில் கிறிஸ்துவின் அடிச்சுவடியில் நடாத்த பெற்றோர் தவறுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

பெற்றோரே! சிந்திப்போம்!

கிறிஸ்துவின் பணியில்

ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜோன் வெஸ்லி

## கனம் ஜோன் வெஸ்லி ஐயரின் வாழ்க்கைச் சரிதம் தொடர் நிகழ்வாய்....

**47**

சகோ. இராஜநாயகம் சுரேந்திரன்

“ஃபூகாய்” எனப் பெயர் கொண்ட ஒரு கட்டிடப்பகுதியொன்றில் கட்டிட வழியாகப் படியேறும்போது ஒரு பலவான், கையில் வலுவான தடிகொண்டு வெஸ்லி ஐயரின் தலையைக் குறிவைத்து பலதடவைகளில் அடிக்கமுயன்றான். அதில் ஒரு தடவை தலையில் பட்டிருந்தாலும் அந்த இடத்திலேயே வெஸ்லி ஐயர் அவர்கள் இறந்து போயிருப்பார். எத்தனையோ தடவைகள் அவரை, அவன் அடித்து விழுத்த முயன்ற போதும் ஒரு அடிதானும் அவர்மீது படாமல் தேவன் கிருபையாகக் காப்பாற்றினார். இது கிறிஸ்து செய்த அற்புதமென சில நூல்களிலே குறிப்பிட்டுள்ளார். இப்படியாகப் பல தடவைகளிலே மிகவும் ஆச்சரியமான விதங்களிலே கனம் ஜோன் வெஸ்லி ஐயர் அவர்கள் தேவ நிழலினால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

இப்படிப்பட்ட எந்த சூழ்நிலையிலும் வெஸ்லி ஐயர் அவர்கள் கலக்கமடையவேயில்லை. ஒவ்வொரு முறையும் தேவன் வெஸ்லி ஐயரை மரணத்தினின்று காப்பாற்றியது உண்மையில் ஒரு அற்புதமே! பயங்கரமான, கொடூரமான கோப வெறி கொண்ட மக்களால் சூழப்பட்டபோதும் கனம் ஜோன் வெஸ்லி ஐயர் பயப்படவேயில்லை. தன் சொந்தவீட்டில் தனியாக வேதாகமத்தைப் படித்துக் கொண்டிருக்கும் போது இருக்கிற அமைதி இந்தக் கொந்தளிப்பின் மத்தியிலும் அவரிடம் பூரணமாகக் காணப்பட்டது. பயங்கரமான புயலின் மத்தியில் தங்களது கப்பல் கடந்து சென்ற நேரத்தில் மொரேவிய மிஷனரிமாரிடம் காணப்பட்ட தெய்வீக அமைதி, தேவ மனிதனாகிய கனம் ஜோன் வெஸ்லி அவர்களுக்கு இப்போது சொந்தமாகக் காணப்பட்டது. தேவனுடைய அற்புதமான விடுதலைகளை நன்றியறிதலோடும், கருத்தோடும் அவர் பிரசங்கித்து வந்தார். அவரைச் சுற்றிலும் அவரை வெறுத்தவர்கள் கொந்தளித்து பலவிதமான துன்பங்களைக் கொடுத்துக் கொண்டிருந்த போதும், கிறிஸ்து கிருபையாக அவருக்குக் கொடுத்த ஊழியப் பணிகளின் நிகழ்வுத் தொகுப்புக்களை அன்றாடம் எழுத்து வாயிலாக கிரமமாக எழுதிக்கொண்டே வந்தார்.

“பிராட்போர்ட்” எனுமிடத்தில் நடைபெற்ற ஒரு சுவிஷேசக் கூட்டமொன்றில் இடம் பெற்ற, வேதனை கலந்த சுவையான சம்பவமொன்றினை “வாலிபன்” சஞ்சிகையின் வாசகர்களுடன் இவ்விடத்தில் சுரேந்திரனாகிய அடியான் பகிர்ந்து கொள்ள வாஞ்சிக்கிறேன். ஜோன்வெஸ்லி அவர்கள் மேற்கண்ட இடமொன்றில் உள்ள உள்ளக அரங்கொன்றில் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். இந்த சுவிஷேசக் கூட்டத்தை கலைத்து, இடையூறு செய்ய வேண்டுமெனத் திட்டம் வகுத்த பொல்லாத மக்கள் பலர் ஒன்றுகூடி பழைய அழுகிப்போன, துர்நாற்றம் வீசும் முட்டைகள் பலவற்றை அந்த அரங்கினுள் கொண்டு வந்து ஒளித்து வைத்திருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசங்கம் முடிவடைந்து வெஸ்லி அவர்கள் ஆசீர்வாதம் கூறும்வேளை, அவர்மீது துர்மணம் வீசும் முட்டைகளை விசிறியடிக்க வேண்டுமென்பது அவர்களது இரகசியத் திட்டமாகும்.

இதன்படி யாவும் கிரமமாக நிகழ்ந்து, இறுதி ஜெபநேரத்தில் தேவ மனிதராகிய வெஸ்லி அவர்கள், கிறிஸ்துவின் அளவற்ற மனதுருக்கத்தினால் நிறையப் பெற்று கண்ணீரோடு மக்களுக்காகப் பலத்த சத்தத்துடன் மனதுருகி பிரார்த்தனையை ஆரம்பித்த சிலநிமிடங்களில், மோசமான திட்டத்தினைக் கொண்டிருந்த சிலர் தேவனுக்குள்ளாக வசனங்களினாலும், மனச்சாட்சியினாலும் குத்துண்டதைத் தொடர்ந்து, அத்தீய செயலைச் செய்ய வேண்டாமென அவர்கள் இடித்துரைக்க, சிலரோ மறுத்துரைக்க, வசனங்கள், வார்த்தைகள் அவர்களிடையே முற்றி தமக்கிடையே அழுகிய முட்டைகள் யாவற்றையும் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளத் தலைப்பட்டனர். இதன் வேடிக்கையான விளைவு யாதெனில், முட்டையடி வாங்க வேண்டியவரோ அமைதியாக இருக்க, முட்டையடியை நடத்தவந்தவர்களோ தம்மிடையே அவற்றைத் தாராளமாகப் பிரயோகித்து, சேற்றினைத் தமது சரீரங்களிலே பூசிக்கொண்டனர். துர்நாற்றம் தத்தமது உடல்களிலே வெளிக்கிளம்ப, மூடையிலிருந்து சிதறும் நெல்லிக்காய்களைப் போன்று அவ்விடத்தை விட்டே ஓடிப்போனார்கள்.



"உன்னோடே போராடுகிறவர்களைத் தேடியும் நீ காணாதிருப்பாய்" என்ற பரிசுத்த வேதாகமத்தின் உண்மையான சத்தியவாக்கு இவ்விடத்திலே அப்படியே நிறைவேறிற்று, அல்லேலுயா!

இப்படியாகப்பட்ட காலங்கள் மெதடிஸ்த உண்மையான கிறிஸ்தவர்களுக்கு பெரும் சோதனைக் காலங்களாகவே காணப்பட்டுள்ளது. இதில் பிரதான சுக்கானாகக் காணப்பட்ட ஜோன்வெஸ்லி அவர்களோ முகம் கொடுத்த இன்னல்கள் மிக அதிகம், ஊழியங்கள் நிமித்தம் அநேக பாடுகளை இங்கிலாந்தின் 'வெட்னஸ்பரி' எனுமிடத்தில் வெஸ்லி ஐயர் அவர்கள் சந்தித்து, உடைகள் கிழிந்தவராக அவரது சகோதரர் சாள்ஸ் வெஸ்லி அவர்களைச் சந்திக்க நேரிட்டபோது சாள்ஸ் வெஸ்லி அவர்கள் மிகவும் மனமும், கண்களும் கலங்கிப்போன மனிதராகக் காணப்பட்டார் எனச் சரித்திரம் சொல்கிறது. தேவமனிதராகிய வெஸ்லி அவர்களுடைய தோற்றம் குறித்து அப்போது கூறப்பட்ட வார்த்தைகள் மிகவும் பிரசித்தமானவை. அதாவது "கிறிஸ்துவின் உண்மையான போர்ச் சேவகனாக எனது சகோதரன் இப்போது காயங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறான்" என்பதே.

ஊழியக்காரியங்களில் எப்போதுமே பஞ்சணையான நிகழ்வுகள் காணப்படமாட்டாது. வேதாகமம் எமக்குக் கற்பிக்கின்றபடி "கிறிஸ்துவுடன் நாம் சுதந்திரர், ஆயினும் அவருடைய பாடுகளுக்கும் நாம் பங்காளிகளாக இருக்கிறோம்" என்றே பரிசுத்த வேதாகமம் எமக்குப் போதிக்கின்றது. எம்முடைய இலங்கைத் தேசத்தைப் பொறுத்தவரையில் பாடுகளுக்கோ அல்லது உபத்திரவங்களுக்கோ இன்னமும் நாம் முகம் கொடுக்கவில்லையென்றே நான் அழுத்தமாக இவ்விடத்தில் எழுதுவேன். ஏனெனில் கிருபையின் நாட்கள் இக்காலங்களிலே எமக்குப் பரிபூரணமாகத் திறக்கப்பட்டுள்ளபடியினால் சர்வ சுதந்திரமாக கிறிஸ்துவின் இரட்சிப்பு குறித்து நாம் தாராளமாக அறிவிக்கின்றோம்.

**வெஸ்லி மீண்டும் வருவார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆண்டவரால் அங்கீகரிக்கபடும் திருப்பணி எது?

அருட்பணி. ஸ்ரீபன். அருளம்பலம்,
இலங்கை இறையியல் கல்லூரி
பிலிமத்தலாவை.

நமது நாளாந்த வாழ்வில் நாம் பலதரப்பட்ட பணிகளில் ஈடுபட்டு வருகின்றோம். இப்பணிகள் ஆண்டவர் இயேசுவினால் அங்கீகரிக்கப்படுகின்றதா இல்லையா போன்ற வினாக்கள் எங்கள் மத்தியில் எழுகின்றது. குறிப்பாக மாற்கு 10:35-45ம் வசனம் வரையுள்ள பகுதியல் செபதேயுவின் குமாரனாகிய யாக்கோபு யோவான் போன்றவர்கள் இயேசுவிடத்தில் வந்து அவர் தமது ஆட்சியில் வரும்போது ஒருவர் வலது பக்கத்திலும் ஒருவர் இடது பக்கத்திலும் இருக்கும்படியாக ஓர் சந்தர்ப்பத்தைத் தருமாறு கேட்கின்றனர். மத்தேயு நற்செய்தியில் இத்தகைய வினாவை யாக்கோபு யோவான் ஆகியோரின் தாயார் கேட்பதாக நாம் படிக்கின்றோம். எனினும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இக்கொள்கையை ஏற்றுக்கொண்டதாக எமக்குத் தெரியவில்லை.

இயேசுவின் சீடர்களுள் பன்னிரண்டுபேர் காணப்பட்டனர். எனினும் யாக்கோபுவும் யோவானும் ஏனைய பத்து சீடர்களையும் விட்டு இருவர் மாத்திரம் இயேசுவிடத்தில் வந்து தமது கோரிக்கையை முன் வைக்கின்றனர். ஆண்டவர் இயேசு அவர்களை நோக்கி மறைமுகமாக எங்கே ஏனைய பத்து சீடர்களும்? ஏன் அவர்களை நீங்கள் கைவிட்டு விட்டீர்களா? போன்ற வினாக்களை எழுப்புகின்றார். அதாவது உங்களால் விலக்கப்பட்டவர்கள் யார்? தள்ளப்பட்ட வர்கள் யார்? போன்ற வினாக்களை அவர்களுக்கு தெரியப் படுத்துகின்றார். **எனவே எங்களுடைய திருப்பணிகளில் நாமும் எப்பொழுதும் மற்றவர்களை வெளித்தள்ளுபவர்களாக அல்ல மாறாக உள்வாங்குபவர்களாக செயல்பட அழைக்கப்படுகிறோம்.** நாம் மற்றவர்களை உள்வாங்க மறுக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது ஆண்டவர் இயேசுவை துன்பப் படுத்துகின்றோம்.

ஆண்டவரிடத்திலே வந்த இரண்டு சீடர்களும் தங்கள் தனிப்பட்ட பிரச்சனை யையே இங்கு முன்வைக்கின்றார்கள். அதாவது அரசாளுகையின் போது ஒருவர் இயேசுவின் வலது பக்கத்திலும் மற்றவர் இடது பக்கத்திலும் இருக்கும் பாக்கியத் தைக் குறித்தே இங்கு பேசுகின்றார்கள். அக்காலத்தில் சமுதாயத்தில் பலதரப்பட்ட மக்கள் பலதரப்பட்ட தேவைகள் உடைய வராகக் காணப்பட்டனர். யூத சமூகம் உரோம சமூகத்திற்கு அடிமையாக இருந்தது. இதன்காரணமாக அரசியல் ஒடுக்குமுறைகள், பொருளாதார ஒடுக்கு முறைகள், கலாசார ஒடுக்குமுறைகள் சமூகத்தில் மலிந்து காணப்பட்டன. ஆனால் இவர்கள் அவைகளைக்குறித்து எதனையும் கேட்கவில்லை. அவர் களுக்கு சமூகத்தில் நிலவிய இக்குழப்பங் கள் அவர்களைக் குழப்பவில்லை. மாறாக தனிப்பட்ட தேவைகளையே முக்கியத்துவப்படுத்தியுள்ளனர். நாமும் எமது திருப்பணிகளில் எங்கள் தனிப்பட்ட தேவைகளையும் விருப்பங்களையும் குறித்து அதிகம் சிந்திக்கின்றோமா? இல்லையேல் சமூகத்தில் நிலவுகின்ற செயற்பாடுகள் எங்களை குழப்புகின்றதா? போன்ற வினாக்களை எழுப்ப அழைக்கப் படுகின்றோம்.

யாக்கோபுவும் யோவானும் நிகழ்காலத் தைக் குறித்து அதிகம் கரிசனை செலுத்தாமல் எதிர்காலத்தைக் குறித்தே அதிகம் சிந்தித்தனர். நிகழ்காலத்தில் நடைபெறும் காரியங்களில் அதிக கவனத்தை செலுத்தாமல் மாறாக எதிர்காலத்தில் நடக்கப்போகின்றவைக ளைக் குறித்தே சிந்திக்க ஆரம்பித்தனர். இவ் எதிர்கால சிந்தனைகள் நிகழ்கால வாழ்க்கைக்கு பெரும் தடைகளாகக் காணப்பட்டன. எனவேதான் நாமும் எங்கள் திருப்பணிகளில் எதிர்காலத்தை மையப்படுத்தியதாக அமையாமல் நிகழ்காலத்தை பிரதிபலிப்பவர்களாக அமைதல் வேண்டப்படும் ஒன்றாகும்.

செபதேயுவின் குமாரர்கள் எல்லோரை யும் உள்வாங்காமல் தனிப்பட்ட தேவை களை முன்வைத்தவர்களாக எதிர்காலத் தின் மையத்தை நோக்கிய பணியைச் செய்தவர்களாக இருந்தபடியினால் ஆண்டவர் இயேசு அவர்களை சவாலிட்டு மற்றவர்களுக்காக துன்பப்பட ஆயத்த மாக இருக்கிறீர்களா? என கேள்வி கேட்கின்றார். அக்கேள்வி **எல்லோரை யும் உள்வாங்கும் திருப்பணியினதும், சமுதாயத்தை மையபபடுத்திய திருப் பணியினதும், நிகழ்காலத்தை மையப் படுத்திய திருப்பணியினதும் முக்கியத்து வத்தை எடுத்துக் காண்பித்தது.** எனவே நாமும் இத்தகைய இலக்குகளை மனதில் கொண்டு கடவுளின் திருப்பணியை ஆற்ற முயற்சிப்போமாக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றா? இருபதா? நூறுகளா? அல்லது யார்?

சகோதரி
சாந்தி பொன்னு

**"...நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்". (1பேதுரு 2:19-21 வரை படிக்கவும்). நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படி அழைக்கப்பட்ட நாம், (1தீமோ.6:12) இவ்வுலக வாழ்விலே விசுவாசத்தின் நல்ல போராட்டதைப் போராடாமல் அந்த இலக்கை அடைய முடியாது. நாம் இயேசுவின் பிள்ளைகளானால், 'உன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றிவா' என்று நம்மை அழைத்த இயேசுவுக்கு நாம் உண்மையாய் இருக்கிறோமா? உலக ஆதாயத்தைக் கணக்கிடாமல் கோதுமை மணியாய் விழுந்து சாக நாம் தயாராக இருக்கிறோமா? சிலுவையின் நிழலில் அனுதினமும் சாய்ந்து இளைப்பாறத் துடிக்கின்ற நாம், கிறிஸ்துவின் பாடுகளில் மரணத்தில் பங்காளிகளாகும்படி சிலுவையில் அறையப் பட நம்மைத் தத்தம் செய்கிறோமா?"**

'வாலிபனே, உனக்கு ஒரு சவால்' என்ற தலைப்பில் ஜனவரி மாத வாலிபன் இதழில் வெளியான கட்டுரையின் ஒரு பகுதிதான் இது. இந்த சவாலுக்கு எந்தவொரு வாலிப வாசகரும் பதில் கொடுக்காததற்காக நன்றி சொல்லவா! இது வாசிப்புப் பழக்கத்தில் ஏற்பட்ட கோளாறா? அல்லது, நமக்கென்ன என்ற அலட்சியமா? அல்லது, வாழ்வின் சவால்களைக் குறித்த குளிர்நிலையா? அல்லது, இதுவும் ஒரு சவாலா என்ற கேலியா தெரியவில்லை. ஆனால், இணையத்தளத்தில் கொடுக்கப்பட்ட பதிலில், பல நூற்றுக் கணக்கானவர்களுக்காக தன் மகனைப் பலிகொடுத்த ஒரு தகப்பனைக் குறித்த ஒரு கதையை ஒரு சிலர் குறிப்பிட்டிருந்தார்களாம் என்று அறிகிறேன். உண்மை நிலையில் எந்த மனித தகப்பனாவது அந்தக் காரியத்தைச் செய்வானா என்பது சந்தேகமே.?

இப்போ, விடுக்கப்பட்ட சவாலுக்கு வருவோம். பாவனைக்குரிய ஒரேயொரு புகையிரதப் பாதை. இதில் இருபது பிள்ளைகள் விளையாடுகிறார்கள். அருகில் பாவனைக்குதவாத பாதை. இதில் ஒரேயொரு பிள்ளை விளையாடுகிறான். வேகமாக வருகிற புகையிரதத்தை நிறுத்தமுடியாது. அதன் பாதை ஆயத்தம், நேரே போகலாம் என்று சமிக்ஞை கொடுக்கவேண்டிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பிலுள்ள புகையிரத நிலைய அதிகாரிக்கு ஒன்றா இருபதா என்று முடிவெடிக்கமுடியாத திண்டாட்டம். பார்வையாளர் மேடையில் நாம் நிற்கிறோம். இப்போ, இருபது பேரிலும் பார்க்க ஒரு பிள்ளை செத்துப்போனால் பரவாயில்லை என்று புகையிரதத்தை அடுத்த பாதைக்குத் திருப்புவதா? திருப்பினால், தெரிந்துகொண்டே தவறான இடத்தில் விளையாடுகின்ற இருபது பிள்ளைகளுக்காக, சரியான தெரிவைச் செய்து பாவனைக்குதவாத பாதையில் விளையாடும் அந்த ஒரு பிள்ளை பலியாவதா? மாத்திரமல்ல, தவறான பாதைக்குத் திருப்புவதால் புகையிரதம் விபத்துக்குள்ளாகி அதில் பயணம் செய்கிற, எதுவுமே தெரியாத நிலையில் பயணிக்கின்ற நூற்றுக் கணக்கான பிரயாணிகளும் பலியாவதா? இவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கும் பார்வையாளர்கள், 'ஓடுங்கள் ஓடுங்கள்' என்று குரல் எழுப்புவதால் என்னவாகப்போகிறது?

ஒன்றா? இருபதா? பல நூறுகளா? அல்லது யார்?

இந்தக் கேள்விக்கு ஒரேயொருவர் சொன்ன பதில் இது:

"எதுவும் சிந்தித்து திட்டமிட்டு செயற்படுத்தமுடியாத இக்கட்டான அந்த இறுதி விநாடியில், பார்வையாளர் பகுதியில் நிற்கும் நான், **அந்த புகை யிரதப் பாதையில் பாய்ந்து முடிந்தளவு அந்த இருபது பிள்ளைகளையும் அப்புறமாகத் தள்ளினால் நான் மனிதன்.** எல்லோரும் காப்பாற்றப்படுவார்கள். ஆனால், இந்த முயற்சியில் நான் தப்பலாம், அல்லது சாகலாம். இந்த சவாலை சந்திக்க நான் ஆயத்தமா என்பதை என்னை நான் கேட்டுப்பார்க்கிறேன். ஆனால், அந்த நேரத்தில் சிந்திப்பதற்கோ, அல்லது ஆபத்து என்று எண்ணுவதற்கு நேரமோ கிடைத்தால், அப்படிப் பாய்ந்து சகலரையும் காப்பாற்றுவது என்பது சந்தேகம் தான். இது என் இருதயத்தில் ஆழத்தில் எழவேண்டும்" என்றார் அவர்.

ஆக, பிறருக்காக என்னைக் கொடுக்கும் அந்த உணர்வு, பிறருக்காக கோதுமை மணியாய் சாகின்ற அந்த அர்ப்பணம் ஒரே விநாடியில் எழமாட்டாது. அது என் வாழ்வாக மாறியிருக்க வேண்டும். இல்லையானால் அந்த கண் இமைக்கும் நேரத்தில் என்னால் இப்படியொரு காரியத்தைச் செய்யமுடியாது. சரியான தெரிவு செய்து சரியான இடத்தில் நிற்கின்ற பிள்ளையைப் போன்றவர்கள் ஏன் சாகவேண்டும்? தவறான தெரிவு செய்து, ஆபத்து என்று தெரிந்தும் அசட்டையாக அந்த வழியில் தம்மை மறந்து நிற்கின்ற இருபது பிள்ளைகளைப் போன்றவர்களுக்கும் ஏன் இன்னொரு தருணம் கொடுக்கக் கூடாது? நடப்பது எதுவும் தெரியாமல் புகையிரதத்தில் பிரயாணம் செய்கிறவர்களைப்போல, பிறந்தோம் வாழுகிறோம் என்று தம் வாழ்வுப் பிரயாணத்தில் எந்த சிந்தனையும் இன்றி சென்று கொண்டிருக்கிற நம்மைச் சூழ்ந்திருக்கிற ஏராளமான மக்கள் ஒரு முறையேனும் தமது வாழ்வை உணராமல், இயேசுவை ஒருமுறையேனும் கேட்டு அறியாமல் ஏன் சாகவேண்டும்?

**இவர்கள் எல்லோருக்குமாக ஏன் நான் சாகக்கூடாது?"** இதுதான் அவர் தந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதமான பதில்.

**"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்.**

**தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான். இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக் கொள்வான்.**

**ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக் கடவன். நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான். ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார்."** (யோவான் 12:24-26)

சவால்களைச் சந்திக்கும் மனதை ஆண்டவரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்வோமாக. ஏனெனில் இன்று நாம் மாநாடு நடத்தி, குழு ஆய்வு நடத்தி, முடிவுகள் எடுத்து, பின்னர் அதைப் பரிசீலனை செய்து, பின்னர் அதற்கு ஆதரவு தேடி, பணம் தேடி எழுந்து செல்ல இது நேரம் அல்ல. ஒவ்வொரு நிமிடமும் மனுஷர் செத்து மடிந்து கொண்டிருக்கிறார்கள். சிலுவைப் பாடுகள், பெரிய வெள்ளி, உயிர்த்த ஞாயிறு என்ற உன்னத அனுபவங்களை நமது அனுபவங்களாக மாற்றுவதைவிட்டு, அவற்றை வெறும் சடங்காச்சாரங்களாக மாற்றிவிட்டு அதற்குள் தம்மைத் தாமே சிறை வைத்துவிட்டு, வெளிவரமுடியாமல் தவிக்கின்ற வாலிபன் வாசகர்களே, அந்தச் சிறையை உடைத்துக்கொண்டு வெளியே வந்து சவால்களைச் சந்திக்க நீங்கள் ஆயத்தமா? நீங்கள் புகையிரதப் பாதையில் விழவேண்டிய தில்லை; நமக்கு அருளப் பட்ட சிலுவையைச் சுமந்துகொண்டு இயேசுவின் மாதிரியில் நடக்க நம்மை அர்ப்பணித்தாலே போதும். நீங்கள் அதற்கு ஆயத்தமா? ஆமென்.

## Kallar - VBS - 2014







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களைவெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையைவெளிப்படுத்துகிறதேவனுக்கு ஸ்தோத்திரம். (2கொரி 2:14)**

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். மறுபடியுமாக கர்த்தருடைய மகா பெரிய கிருபையினாலே இந்த வருட சேகர வாலிபர் பாசறையினை நடாத்தி முடித்து நன்றியறிதலோடு பாசறையின் அனுபவங்களை பகிர்வதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

இப்பாசறையானது அக்கினி என்ற தலைப்பிலே சித்திரை 11ம் திகதி முதல் 14ம் திகதி 2014 வரையான காலப் பகுதியில் திருகோணமலை நிலாவெளி பிரதேசத்தில் அமைந்துள்ள அருளகம் பாசறை மையத்திலே நடாத்தப்பட்டது. இப் பாசறையினை எமது கோட்டைமுனை சேகர முகாமைக்குரு அருட்திரு. ஞானரூபன் போதகர் அவர்கள் தலைமை தாங்கி சிறப்பித்திருந்தார். அருட்திரு. ஞானரூபன் போதகர் அவர்கள் "நான் யார்" என்ற தலைப்பில் வேதப்படிப்பை நடாத்தி பாசறையினை ஒரு சுயமீட்டலுடன் ஆரம்பித்து வைத்திருந்தார்.

அது மட்டுமல்லாது திருகோணமலை சேகர முகாமைக்குரு அருட்திரு. சுஜிதர் சிவநாயகம் அவர்களின் உதவியும் திருகோணமலை சேகர வாலிபர்களின் உதவியும் பாசறையின் வெற்றிக்கு அளப்பெரிய பங்காற்றின. அருட்திரு. சுஜிதர் சிவநாயகம் அவர்கள் திறனாளியாயிரு என்னும் தலைப்பிலே பயிலரங்கை நடாத்தி நாமும் சமூகத்தில் ஏதாவது சிறிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்கிற விதையை விதைத்து பல வாலிபர்கள் தீர்மானமெடுக்க உதவி செய்தார்.

அத்தோடு வாலிபர்களின் தற்கால நிலை குறித்து தெளிவை அல்லது விழிப்புணர்வை ஏற்படுத்த காதல், திருமணம், பாலுணர்ச்சி எனும் தலைப்பில் அருமை சகோதரன் திரு.ஜெயராஜ் அவர்கள் இன்னொரு பயிலரங்கையும் நடாத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் திருமதி. ஜெயராஜ் அவர்களும் பெண்களுக்கான பட்டறையை நடாத்தி பெண் வாலிபர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

இந்த பாசறையின் முக்கியமான காரியங்களில் வாலிபர்களின் மூப்பர்களாக அழைத்துச் செல்லப்பட்ட எமது கோட்டைமுனை சபையை சேர்ந்த திரு.சுரேஷ் அவர்களும் திருமதி. அருள்பிரகாசம் அவர்களும் மிகப்பெரிய ஒத்துழைப்பை வழங்கி தங்கள் பங்களிப்பை செய்தமையும் குறிப்பிடத்தக்கது. திரு.சுரேஷ் அவர்கள் சுய மீளாய்வு நடாத்துமுகமாக ஒரு நிகழ்வை நடாத்தி ஒவ்வொருவரின் இருதயத்திலும் பாசறையின் அனுபவங்களை பதிய வைத்தமையும் வாலிபர்களுக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்தியமையும் சிறப்பாயிருந்தது.

பாசறையின் சிறப்பு பேச்சாளராக இந்தியாவிலிருந்து வருகை தந்த சகோதரர் கிறிஸ்டோ இம்மானுவேல் அவர்கள் ஆண்டவருடைய அளவு கடந்த பிரசனத்தோடு பாசறையின் மூன்று நாட்களிலும் அக்கினி என்னும் தலைப்பிலே ஆண்டவருடைய வார்த்தைகளை பிரசங்கித்து வாலிபர்களின் உள்ளத்திலே அக்கினியை ஆண்டவர் விதைக்க உதவி செய்தார். விசேஷித்த விதத்திலே கர்த்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிஷேகத்தினாலே வாலிபர்களை நிறைத்ததும் வாலிபர்கள் தீர்மானத்தோடு பாசறையை விட்டு கடந்து சென்றதும் பாசறையினால் கர்த்தர் மகிமைப்பட்டதையும் காணக்கூடியதாய் இருந்தது.

இப்பாசறையிலே எமது சேகரத்தின் நான்கு சபை வாலிபர்களும் ஒத்துழைப்பு வழங்கி கலந்து சிறப்பித்ததோடு கர்த்தருடைய அக்கினியை உள்ளத்தில் பெற்றுக்கொண்டு ஆண்டவருக்காக ஏதாவது செய்ய வேண்டுமென்ற தங்களை ஒப்புக்கொடுத்து செல்லும் வகையில் ஆண்டவர் அனுக்கிரகம் செய்திருந்தார்.

இந்த பாசறையை நடாத்த சகல விதமான ஒத்துழைப்புகளையும், பணரீதியான உதவிகளை வழங்கிய யாவருக்கும் மனமார்ந்த நன்றிகளை சேகர வாலிபர்களாக கூறுவதில் கடமைப்பட்டுள்ளோம்.

**தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது. இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள். நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். (கொலோ 3:15)**

**சேகா வாலிபர் சங்க செயலாளர்**
**கோட்டைமுனை**

# அக்கினி இறைவா.....

K.T. சகாயம்
- கிரான் -

உலகம் என்னை பெயர் செபூல் என்றது
உத்தமர் என்னை அந்திகிறிஸ்து என்றனர்
உள்ளங்கள் என்னை சதிகாரன் என்றது
உண்மையில் அதுவே உண்மையாய் அமைந்தது.

உறுதியாய் கேட்டேன் கர்த்தரிடம்
உண்மையாய் நான் யார் என
உண்மையாய் உரைத்த அவர் செம்மொழி
உலகில் என்னை ஓர் கிரீடமாய்

உள்ளத்தில் கறை படிந்து வாழ்கிறாயா?
உள்ளூர் வெறுக்க வாழ்கிறாயா?
உன்னதர் அழைக்கிறார் வருவாயா?
உலகில் அக்கினி இறைவனை அடைவாயா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் பகுதி



# அப்பாவின் அன்பு



ஒரு ஊரில் ராணி என்ற 13 வயது சிறுமி இருந்தாள். அவளுடைய பெற்றோர் ஒரு வாகன விபத்தில் மரித்து விட்டார்கள். இதனால் ராணி அவளுடைய பாட்டியுடன் வசித்து வந்தாள். அவளுக்கு சகோதரர்கள் இல்லை. ராணியின் முகம் எப்பொழுதும் துக்கமாகவே காணப்பட்டது. தனக்கென்று யாரும் இல்லையே என்ற கவலைப்பட்டுக் கொண்டிருப்பாள். அவளுடைய பாட்டியோ அவளை சந்தோஷப் படுத்துவதற்காக பல்வேறு காரியங்களை செய்வார். எனினும் பாட்டியால் ராணியை சந்தோஷப்படுத்தமுடியவில்லை.

பாடசாலையிலும் இதே போன்று யாருடனுமே கதைக்காமல் தனிமையாகத்தான் இருப்பாள். வகுப்பில் உள்ள ஏனைய மாணவர்கள் இவளுடன் கதைத்தாலும் இவள் அதிகமாக கதைக்கமாட்டாள். இவர்களுடைய வகுப்பிற்கு ஜூலி என்ற ஒரு பெண் புதிதாக வந்து சேர்ந்தாள். ஜூலிக்கு ராணியின் அருகில் உட்காருவதற்கு வகுப்பறையில் இடம் கிடைத்தது. ஜூலி ராணியுடன் கதைக்கத் தொடங்கினாள். ஆனால் ராணியோ ஜூலியுடன் பெரிதாக கதைப்பதில்லை. இது ஜூலிக்கு பெரிதும் கவலையாக இருந்தது. ஒவ்வொரு நாளும் இயேசப்பாவிடம் ராணி என்னுடன் பேசவேண்டும் என்று ஜெபிக்கத் தொடங்கினாள்.

ஜூலி ஒருநாள் பாடசாலை விட்டு வீடு திரும்பும் போது ஒரு பாட்டி அவளை இடைமறித்து "உன்பெயர் ஜூலியா?" என்று கேட்டார் ஜூலியும் "நான் தான் ஜூலி" என்றாள். நான் ராணியுடைய பாட்டி. அவளுடைய பெற்றோர் ஒரு வாகன விபத்தில் இறந்து விட்டார்கள். அன்றிலிருந்து ராணி யாருடனும் பேசுவதில்லை. எப்பொழுதும் துக்கமாகவே இருக்கிறாள். உங்களுடைய வகுப்பாசிரியர் சொன்னார், நீ தான் அவளுக்கு அருகில் இருப்பதாக. அவளை சந்தோஷமான ஒரு பிள்ளையாக மாற்றிதர முடியுமா? "என்று அந்தப்பாட்டி கேட்டார். ஜூலி பாட்டியிடம்" கட்டாயமாக நான் இந்த உதவியை செய்வேன் பாட்டி" என்று கூறினாள்.

தினமும் ஜூலி இன்று என்னுடன் ராணி பேசவேண்டும் என்று ஜெபித்து விட்டு செல்வாள். ராணியும் கொஞ்சம் கொஞ்சமாக ஜூலியுடன் பேசத் தொடங்கினாள். ஒரு நாள் ராணி ஜூலியிடம்" எனக்கு யாரும் இல்லை. நான் தனித்து விடப்பட்டு விட்டேன்" என்று அழத் தொடங்கினாள். ஜூலி அவளிடம் "இந்த உலகத்தில் யாரும் தனித்தில்லை. எல்லாருக்கும் அப்பா ஒருவர் இருக்கிறார். அவரை நாம் அப்பா என்று உரிமையுடன் கூப்பிடமுடியும். அவர் நமக்கு கட்டாயம் பதில் கொடுப்பார்" என்று சொல்லி தன்னிடம் இருந்த வேதாகமத்தை கொடுத்து அதை வாசிக்கும் படியும், ஜெபிப்பது எப்படி என்றும் கூறினாள். சிறிது நாட்களின் பின் எனக்கு இயேசப்பா இருக்கிறார். நான் அவருடைய பிள்ளை என்று சந்தோஷமாக கூறினாள்.

என் அன்பு குட்டி தம்பி, தங்கைகளே! இன்று நாம் எத்தனை பேர் என்னை அன்பு செலுத்த யாருமில்லை என்று கவலைப்படுகின்றீர்கள்? இன்று நம்முடைய நண்பர்கள் பலர் அன்பிற்காக ஏங்குகின்றார்கள்? கலாத்தியர் 4:6 இல், **"மேலும் நீங்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அப்பாவின் அன்பு சிறுகதை தொடர்ச்சி.............**

**புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா பிதாவே! என்று கூப்பிடதக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களிலே அனுப்பினார்"** நாம் யாருமே தனிமையாக இல்லை. எம்முடைய பரமபிதா நம்முடன் இருக்கிறார். அவர் எம்மில் அன்பு செலுத்துகின்றார். எம்முடைய அப்பாவின் அன்பைபற்றி நாம் மற்றவர்களுக்கு கூறுவோமா?

**ஜெபம்:-**

**அன்புள்ள இயேசப்பா, என்னையும் உம்முடைய பிள்ளையாக தெரிந்து கொண்டமைக்கு நன்றி. இந்த அன்பை நான் மற்றவர்களிடத்திலும் பகிர்ந்து கொள்ள உதவி செய்யுங்கள் ஆமென்.**

உருவாக்கம் : திருமதி டெய்சி ஜெர்ஷோன்

குறுக்கெழுத்துப் போட்டி இல. 75

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | | 6 | |
| 7 | | 8 | | | | 9 | |
| 10 | | 11 | 12 | 13 | | 14 | |
| 15 | | | | 16 | | 17 | |
| 18 | | | 19 | 20 | 21 | 22 | 28 |
| | | | | 24 | | 25 | |
| | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |
| | | | | | | | |

**இடமிருந்து வலம்**

1. இதைக் கூறி நற்காரியங்களை சுவிஷேஷமாய் அறிவித்து, இரட்சிப்பை பிரசித்தப்படுத்தி (மத் 5:XX)

13. ஆவியில் இது உள்ளவர்கள் பாக்கியவான் கள் (மாறியுள்ளது) (மத் 5:XX)

23. தாவீது பாடியது (மாறியுள்ளது)

26. இது கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது (மத் 7:XX)

**மேலிருந்து கீழ்**

1. தன் இவனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் (மத் 5:XX)

3. இது உள்ளவன் உயர்த்தப்படுவான்

6. நீயோ தர்மம் செய்யும் போது இங்கே செய் (மத் 6:XX)

13. மொர்கெகாயின் அண்ணன் மகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 73 ற்கான விடைகள்

### இடமிருந்து வலம்

1. சந்திரன் - சங் 104:19
3. குட (குடம்) - ஆதி 24:20
4. முள்மு (முள்முடி) - மாற் 15:17
6. டகுல் (குடல்) - 2 நாளா 21:15
8. வெள்ளம் - ஏசா 59:19
9. ம்டபிப்ளிஓ (ஒளிப்பிடம்) - ஏசா 45:4
11. கன்ன் (கன்னான்) - ஏசா 40:19
12. தாகோ (தாகோன்) - 1 சாமு 5:3
14. காடைகள் - யாத் 16:13
16. பரித்சுதம் (பரிசுத்தம்) - 1 தெச 4:7

### மேலிருந்து கீழ்

2. திமல் (மதில்) - வெளி 21:14
3. குள்ளன் - லூக் 19:3
4. டமும் (முடம்) - 2 சாமு 9:13
5. முள் - 2 கொரி 12:7
7. குருடன் - லூக் 6:39
8. வெள்ளிக்காசு - லூக் 15:8
9. ம்கமே (மேகம்) - எபி 12:1
10. பின்மாரி - சக 10:1
12. தாகம் - ஏசா 44:3
13. கோள் - நீதி 16:28
15. டைத (தடை) - 2 தெச 2:7

## குறுக்கெழுத்துப் போட்டி 73 இற்கான வெற்றியாளர்

S. அரியரெத்தினம்,
298/II, கிளெனி லேன், மட்டக்களப்பு

இப் போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான எம் இதழைத் தொடர்ந்து பெறுவார்

**குறுக்கெழுத்துப் போட்டி 75 ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி**
**20.05.2014**

**அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர்,
குறுக்கெழுத்துப் போட்டி இல: 75,
"வாலிபன்"
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,
மட்டக்களப்பு.



# சிறுவர்களுக்கான வினாவிடைப் போட்டி : 68

1. கர்த்தர் எகிப்து தேசத்தை காரிருள் மூலம் எத்தனை நாள் வாதித்தார்?

2. எகிப்தின் மீது வந்த ஏழாவது வாதை என்ன?

3. எல்க்கானா அன்னாளுக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள்?

4. இயேசு உயிர்த்தெழுந்த பின் முதலில் யாருக்குத் தரிசனமானார்?

5. மகதலேனா மரியாளிடமிருந்து இயேசு மொத்தம் எத்தனை பிசாசுகளைத் துரத்தியிருந்தார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினா விடைப் போட்டி 66 ற்கான விடைகள்

1. ஓரேப்
2. ரூபன்
3. எலிசபாள்
4. நூற்று முப்பத்தி ஏழு
5. நான்கு

இப் போட்டியில் வெற்றி பெறுபவர் அழகிய புத்தகம் ஒன்றை வெற்றி பெறுவர்.
வினா விடைப்போட்டி 68 ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி :
**20.05.2014**

### அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர்,
வினா விடைப் போட்டி இல. 68,
"வாலிபன்"
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,
மட்டக்களப்பு.

### 66ற்கான வெற்றியாளர்

சரியான விடைகள் கிடைக்கப்பெறவில்லை

### போட்டி பற்றிய நிபந்தனைகள்

- 16 வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.
- ஞாயிறு பாடசாலை அதிபர் / ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாய் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

## Kallar - VBS - 2014







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தேனீக்கள்" விடுமுறை வேதாகமப் பாடசாலை

## - திருகோணமலைசேகரம் -




இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். "எங்களுக்கல்ல, எங்களுக்கல்லஉந்தன் நாமத்திற்கேமகிமை". அவருடையநாமம் மகிமைப்படும்படியாக திருகோணமலை மெதடிஸ்த திருஅவையின் வாலிபர்களைக் கொண்டுகர்த்தர் கிருபையாய் பெரியகாரியங்களைநடப்பித்துக் கொண்டிருக்கிறார். அதுபோல கடந்த சித்திரை 5ம், 6ம் தினங்களில் விடுமுறை வேதாகம பாடசாலையொன்றை நடாத்தகர்த்தர் தரிசனத்தைக் கொடுத்தார். மிகவும் பிரயாசத்துடன் 65 பேர் அடங்கியவாலிபர் குழு இயங்கியது. "தேனீக்கள்"எனும் தலைப்பின் கீழ் நடாத்தப்பட்ட இவ்விடுமுறை வேதாகம பாடசாலையில் கர்த்தரின் கிருபையால் 181 சிறுவர்கள் கலந்துகொண்டனர். இவர்களில் 105 சிறுவர்கள் கிறிஸ்துவை அறியாதவர்கள் என்பதேசிறப்பம்சமாகும். 2 நாட்கள் நடைபெற்ற இவ்விடுமுறை வேதாகம பாடசாலையில் சிறுவர்களுக்குவேதாகமம் அறிமுகம் செய்யப்பட்டது. வேதத்தின் தன்மை,அதன் சிறப்பம்சங்கள் குறித்துதெளிவான விளக்கம் அளிக்கப்பட்டதோடு, வேதவார்த்தைகளோடு நடக்கவேண்டியதன் அவசியமும் உணர்த்தப்பட்டது. இந்நிகழ்விற்கு வடக்குகிழக்கு திருமாவட்டத்தின் வாலிபர் செயலாளர் திருவாளர்.சு.கஜாந்தன் அவர்கள் வருகைதந்து சிறப்பித்தார். அணைத்து சிறார்களுக்கும் புதியபாடல்கள் மூலம் கிறிஸ்துவின் அன்பு பகரப்பட்டதோடு பரிசுத்த வேதாகமத்தைக் குறித்துக் கற்றுக் கொடுக்கவும் கர்த்தர் கிருபைசெய்தார். எல்லாதுதியும், கனமும், மகிமையும் கர்த்தர் ஒருவருக்கே. ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்

தேவனுடைய கட்டளைகளுக்குக்
கீழ்ப்படியாதவர்கள் அவருடைய
வாக்குத்தத்தங்களுக்கு உரிமை கோர இயலாது
- ஜான் கால்வின் -



உங்கள் ஜெபத் தேவைகளை எங்களுக்கு தபால் மூலமாகவோ
மின்னஞ்சல் மூலமாகவோ குறுஞ்செய்தி மூலமாகவோ
அனுப்பி வைக்கலாம். நாங்களும் உங்களுடன்
சேர்ந்து உங்களுக்காக ஜெபிப்போம்.

**SMS க்கான இலக்கங்கள்:**

077-7813269 077-2335106
077-9584930 077-7718847

இப்புத்தகத்தை தங்களது சபைகளிலும், அறிமுகம் செய்ய விரும்புபவர்கள் தயவாய் எம்மை தொடர்பு கொள்ளவும். இதன் மூலமாய் வரும் ஆசீர்வாதங்கள் தங்களது வாழ்வையும், சபைகளையும் நிரப்புவதாக.

வாலிபர்களுக்கான விஷேட ஜெபம் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 7.00 மணிக்கு கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயத்தில் நடைபெறும்.

கடிதத் தொடர்புகளுக்கு:


ஆசிரியர்,
" வாலிபன் " சஞ்சிகை,
மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை,
மட்டக்களப்பு, இலங்கை.


வாலிபன்
VAALIPAN
வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

VAALIPAN MINISTRIES
SRI LANKA


vaalipankyf@gmail.com
http://www.vaalipan.com/
/VAALIPAN/ /Vaalipan_kyf



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வணசிங்கா பிரிண்டர்ஸ், திருமலை வீதி, மட்டக்களப்பு. 065 222 7170